# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## வாரப் பாடசாலை

செயலட்டை - 26

வாரம் -02

2021.11.08- 2021.11.12

பாடம் :- பொருளியல்

தரம் - 12

தயாரிப்பு:- திருமதி .F. றிஸ்லா BA (Hons)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

**தேர்ச்சி மட்டம் :- 9.1**

**பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01) " வெளிநாட்டு வர்த்தகம் " என்ற பதத்தை விளக்குக.

02) இலங்கையின் பாரிய ஏற்றுமதி நாடுகள் 5 ஐக் குறிப்பிடுக.

03) இலங்கையின் பாரிய இறக்குமதி நாடுகள் 5 ஐக் குறிப்பிடுக.

04) சர்வதேச வர்த்தக கோட்பாட்டின் அடிப்படை எடுகோள்கள் யாவை?

05) முழு நன்மை கோட்பாட்டின் குறைபாடு யாது?

06) பின்வரும் அட்டவணை இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஓரலகு ஊழியத்தைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய அரசி மற்றும் துணி ஆகியவற்றின் உற்பத்தி அளவுகளை காட்டுகின்றது.

| நாடு | அரிசி | துணி |
|---|---|---|
| இந்தியா | 2 | 1 |
| சீனா | 4 | 1 |

அ ) ஒவ்வொரு நாடும் 100 அலகு ஊழியத்தை கொண்டிருக்கும் அதேவேளை இவ்விரு உற்பத்திகளுக்குமிடையே இவ்வூழியப்படை சம அளவில் பகிரப்படுகின்றதாயின் இவ்விரு நாடுகளும் தனித்தனியாகவும் கூட்டாகவும் ஒவ்வொரு உற்பத்தியையும் எந்தளவு உற்பத்தி செய்யும்?

ஆ ) அரிசி உற்பத்தியில் எந்த நாடு முழு நன்மையை கொண்டுள்ளது?
துணி உற்பத்தியில் எந்த நாடு முழு நன்மையை கொண்டுள்ளது?

இ ) ஒவ்வொரு நாட்டிலும் ஒரு கிலோ அரிசி உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு யாது

ஈ ) ஒவ்வொரு நாடும் தான் ஒப்பீட்டு நன்மையினை கொண்டுள்ள உற்பத்தியில் சிறக்குமியல்பு அடையுமாயின் மொத்த அல்லது கூட்டு உற்பத்தியின் அளவு யாது?